# தேசிய பாடசாலைகளுக்கான அதிபர் தெரிவு - 2024
# (இலங்கை அதிபர் சேவை தரம் I)

## புள்ளி வழங்கும் திட்டம்

### 1. சிரேட்டத்துவம் உச்சப் புள்ளி 30

(இலங்கை அதிபர் சேவை தரம் 1 க்கு பதவி உயர்வு பெற்ற நாளிலிருந்து வருடத்திற்கு வழங்கப்படும் புள்ளியின் எண்ணிக்கை, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 01/2019 இன்படி தரம் 1 இல் அதிக முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவை காலத்துடன் சகிதமான அலுவலர்களுக்கு சிரேட்டத்துவத்துக்கு ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளி அளவில் ஏனைய அலுவலர்களுக்கு விகிதாசரமாக தரம் 1 இல் முனைப்பான மற்றும் திருப்திகரமான சேவைக் காலத்துக்கு புள்ளி கிட்டுமாறு புள்ளி வழங்கல மேற்கொள்ளப்படும். மேலும், ஒழுக்காற்று நடவடிக்கை அல்லது ஊதியம் இல்லாத விடுப்பு அல்லது திருப்திகரமான சேவையை இழந்த அதிகாரிக்கு மட்டுமே அந்த காலத்திற்கு புள்ளிகள் வழங்கப்படாது.)

### 2. பாடசாலை முகாமைத்துவம் தொடர்பான சேவை அனுபவம் உச்சப் புள்ளி 20

#### 2.1 அதிபர் ஒருவராக

நியமனக் கடிதம், சேவைப் பிரமாணக் குறிப்பு விதிகளின் பிரகாரம் நியமன அதிகாரம் கொண்டவர் அல்லது அதிகாரத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அதிகாரம் கொண்டவர் (அமைச்சுச் செயலாளர்/மாகாண தலைமைச் செயலாளர்/ மாகாணக் கல்விச் செயலாளர்) மூலம் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

| | |
|---|---|
| a. 1AB பாடசாலையின் அதிபராக ஒரு வருடத்திற்கு | 03 |
| b. 1C பாடசாலையின் அதிபராக ஒரு வருடத்திற்கு | 02 |
| c. வகை 2 பாடசாலையின் அதிபராக ஒரு வருடத்திற்கு | 01 |
| d. வகை 3 பாடசாலையின் அதிபராக ஒரு வருடத்திற்கு | 01 |

#### 2.2 பிரதி/உதவி அதிபராக

| | |
|---|---|
| a. 1AB பாடசாலையின் பிரதி/உதவி அதிபராக ஒரு முழு வருடத்திற்கு | 02 |
| b. 1C பாடசாலையின் பிரதி/உதவி அதிபராக ஒரு முழு வருடத்திற்கு | 01 |
| c. வகை 2 அல்லது 3 பாடசாலையின் அதிபராக ஒரு வருடத்திற்கு | 01 |

குறிப்பு 01: வருடத்திற்கு மொத்த புள்ளிகளின் எண்ணிக்கையானது 12 மாத சேவை காலத்திற்கு மட்டுமே வழங்கப்படும் என்பதோடு அதற்கும் குறைவான காலத்திற்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. மேலும், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இலக்கம் 2310/29 மற்றும் 14.12.2022 தேதியிட்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதி 141இன் படி நியமிக்கப்பட்ட அலுவலர்களுக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

குறிப்பு 2: மேலே 2.1இ 2.2 இற்கு உரியதாக பாடசாலை நியமன / இடமாற்றக் கடிதம் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களில் பாடசாலை வகைப்பாட்டுக்கு ஏற்ப 1AB, 1C, 2, 3 பாடசாலையாக இருந்ததென மற்றும் அந்த கடிதம் கையொப்பம் இடப்பட்டிருப்பது நியமன / அங்கீகரிக்கப்பட்ட நியமன அதிகாரம் அதிகாரியால் என்பது எழுத்துபூர்வமாக உறுதி செய்யப்பட்டிருக்க வேண்டும்.

### 3. மேலதிக கல்வித் தகுதிகள் உச்சப் புள்ளி 15

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் பட்டம் வழங்கும் நிறுவனமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிறுவனத்தால் அல்லது தேசிய கல்வி நிறுவகத்தால் வழங்கப்பட்ட தகுதிகளுக்கு மட்டுமே புள்ளிகள் வழங்கப்படும்.

(ஆட்சேர்ப்பு அல்லது வினைத்திறன் தடை தாண்டல் அல்லது பதவி உயர்வுகளுக்கு அடிப்படை தகுதியாக கருதப்பட்ட கல்வித் தகுதிகளுக்கு புள்ளிகள் வழங்கப்படாது.)

| | |
|---|---|
| 3.1 பட்டப் பின் பட்டம் அல்லது அதற்கு மேல் | - 15 புள்ளிகள் |
| 3.2 பட்டப் பின் டிப்ளமோ | - 12 புள்ளிகள் |
| 3.3 அடிப்படை பட்டம் | - 09 புள்ளிகள் |
| 3.4 பாடசாலை முகாமைத்துவ டிப்ளோமா | - 06 புள்ளிகள் |
| 3.5 ஏனைய டிப்ளோமா | - 03 புள்ளிகள் |

( மேலே 3.4 மற்றும் 3.5 இன் கீழ் புள்ளிகளை வழங்குவதில் சம்பந்தப்பட்ட டிப்ளோமாவின் கற்கை காலம் குறைந்தது 450 மணிநேரம் அல்லது 9 மாதங்கள் அல்லது அதற்கும் அதிகமாக இருக்க வேண்டும் என்பதோடு தொடர்புடைய டிப்ளோமாவை வழங்கும் நிறுவனம் அரசாங்கத்தின் அல்லது பல்கலைக்கழக

மானியங்கள் ஆணைக்குழுவின் அல்லது மூன்றாம் நிலை மற்றும் தொழில் கல்வி ஆணைக்குழுவின் பதிவு) செய்யப்பட்ட நிறுவனமாக இருக்க வேண்டும்)

**4. ஆங்கில மொழி புலமை** **உச்சப் புள்ளி 05**

(தொடர்பாடல் திறன் கருத்திற் கொள்ளப்படும்)

**5. கணினி கல்வி தொடர்பான அறிவு** **உச்சப் புள்ளி 05**

(பிரயோக செயற்பாடு கருத்திற் கொள்ளப்படும்)

**6. சேவை மதிப்பீடுகள்** **உச்சப் புள்ளி 03**

கல்விச் செயலாளர் அல்லது திணைக்கள தலைவரால் பொது 230 B புகழுரை மற்றும் கண்டன மாதிரி படிவத்தின்படி முறையாக வழங்கப்பட்ட சேவை மதிப்பீடுகளுக்கு தலா 1 புள்ளி வீதம் அதிகபட்சம் 3 சேவை மதிப்பீடுகளுக்கு

**குறிப்பு:** (திணைக்களத் தலைவர் என்றால் மாகாண பிரதம செயலாளர், மாகாணக் கல்விச் செயலாளர், மாகாணக் கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர்.)

**7. முன்வைப்பு** **உச்சப் புள்ளி 15**

கல்வித் துறையில் புதிய போக்குகள், தற்போதைய கல்விக் கொள்கைகள் மற்றும் 21 ஆம் நூற்றாண்டில் கல்வித் துறை சவால்களை கவனத்திற் கொண்டு தேசிய பாடசாலை அதிபராக எதிர்காலத்தில் செயற்பட எதிர்பார்க்கும விதம் குறித்து தமது நடைமுறை அனுபவத்தையொட்டியதாக 5 நிமிடங்களுக்கு வாய்மொழி மூலமான முன்வைப்பு செய்யப்பட வேண்டும் என்பதோடு முன்வைப்பின் அச்சிட்ட பிரதியை நேர்முக பரீட்சை சபையிடம் சமர்ப்பிக்க வேண்டும். அதற்கு, பின்வரும் விடயங்களின் கீழ் புள்ளிகள் வழங்கப்படும்.

7.1 பிரவேசம் மற்றும் அறிமுகம் - 02 புள்ளிகள்
7.2 உள்ளடக்கம்- (பாடசாலையை இனங்காணல், நோக்கங்கள், முன்மொழிவுகள்)- 05 புள்ளிகள்
7.3 முன்வைக்கும் திறன் - 03 புள்ளிகள்
7.4 நேர முகாமைத்துவம் - 02 புள்ளிகள்

**8. விடய ஆய்வு** **உச்சப் புள்ளி 05**

(நேர்முக பரீட்சை சபையால் முன்வைக்கப்படும் வாய்மொழி மூல சம்பவம் தொடர்பாக வினாக்கள் கேட்கப்படும் என்பதோடு சம்பவ பகுப்பாய்வு மற்றும் பிரச்சனைக்கு பெற்றுத் தரும் தீர்வு தொடர்பில் கவனம் செலுத்தப்படும்)

**9. நேர்முக பரீட்சையில் காட்டப்படும் ஒட்டுமொத்த திறன்கள் மற்றும் ஆளுமை** **உச்சப் புள்ளி 05**

**மொத்த புள்ளி 100**